காரைக்குடி

வைரவன் கோவில் நகரத்தார் செய்திருக்கிற

தீர்மானங்கள்.

உ

சிவமயம்.

காரைக்குடி.

வைரவன்கோவிற்பிரிவினர்"

செய்திருக்கிற

தீர்மானங்கள்.

ரௌத்திரி வருஷம் மாசிமீ ௨௰௨.

௧. கழுத்துருவிற்குப் பொன் கொடுப்பதற்கு மாப்பிள்ளை வீட்டார் மஞ்சள் குங்குமம் சந்தனம் புஷ்பம் தேங்காய் ௧௫-க்குள்ளும், வாழைப்பழம் ௧௱௧-க்குள்ளும், எலுமிச்சம்பழம் ௱௧-க்குள்ளும், வெற்றிலை பாக்கும் கொண்டுவரச்செய்கிறது. இதுபோல் நாமும் கொண்டுபோகிறது. பெண்வீட்டார் ஐந்துவகைப் பலகாரம் செய்து வருகிறவர்களைச் சாப்பிடச் செய்கிறது.

மாப்பிள்ளை வீட்டாருக்கு வாழைப்பழம் ருக-க்குள்ளும், பலகாரம் பெரிதில்லாமல் பந்திக்குப் போடுகிற மாதிரி சிறிதாய்ச் செய்து ஷெ ஐந்துவகைப் பலகாரத்தில்வகைக்குரு.க-க்குள்ளும் கொடுக்கிறது. ஷெ விசேஷத்தில் பெண் வீட்டுக்காரரும் மாப்பிள்ளை வீட்டுக்காரரும் மேற்கண்டிருக்கிறதைத் தவிர வேறெவ்வித சட்டி சாமான் வகையரு கொடுப்பதும் வாங்குவதுமில்லை. வெற்றிலையும் பாக்கு ௬. படி உ-க்குள்ளும் கொடுக்கிறது. பலகாரம் பழங்களுக்காக ரூபாய் கொடுப்பதும் வாங்குவதுமில்லை.

உ. கல்யாணத்தில் வேவு திருப்பூட்டுகிறது முதலான சகல முறைகளுக்கும் சட்டி சவுக்கம் கொட்டான் சில்லரைச்சாமான் பழம் வகையருக் கொடுக்கிறதில்லை. திருப்பூட்டுகிறவர்கள் இசைகுடிமானம் எழுதுகிறவர்கள் மாமக்காரர் சடங்குக்காரர்களுக்குப் பெட்டியில் வெற்றிலை பாக்கு மட்டும் கொடுக்கிறது.

ந. கல்யாணத்தில் பணம் எழுதிய புள்ளிக்குப் பாக்குப்பணம் ரூ அரையே அரைக்காலுக்குள்ளும், பெண்பிள்ளைகளுக்குப் புள்ளி ஒன்றுக்கு பாக்கு வகை

யருவிற்கு ரூ ௧-க்குள்ளும் கொடுக்கிறது. வெற்றிலை பாக்கு எடுத்துப் போட்டுக்கொள்ளுகிறது. அபிமானமாய்க் கூடிப்பணம் எழுதுகிறவர்களுக்கு ரூபாய் ஒன்றுக்கு அரை ரூபாய் வீதம் பாக்குப்பணமும் பாக்கு சி. படி ௨-ம், வெற்றிலையும், மூன்றுவகைப் பழமும் பெட்டியில் வைத்துக் கொடுக்கிறது.

௪. புதுமை கல்யாணத்துக்கு மாமவேவு எடுத்துகிறவர்களுக்குப் புள்ளி ஒன்றுக்கு வெற்றிலையுடன் சி. படி இரண்டிற்குள் பாக்கு மட்டும் பெட்டியில் கொடுக்கிறது. வேறெவ்வித சாமானும் கொடுக்கிறதில்லை.

௫. பெண்ணழைத்த வீட்டிலும் வேவு எடுத்தின வீட்டிலும் மூன்று வகைக்குள் பலகாரம் சிறிதாகச் செய்து உபயோகிக்கிறது. ~~சம்பந்திக்கும் வகையறாபேர்களுக்கும் எந்தக்காரியங்களுக்கும் மூன்றுவகைப்பலகாரம் சிறுசாக உபயோகிக்கக்கூடியதாகக் கொடுத்து வாங்கிக்கொள்கிறது.~~

௬. ருதுசடங்கிற்கு சர்க்கரை கற்கண்டு சீனி இவைகளில் ஒன்று அள்ளிவழங்குகிறது. பணம் சில்லரைச்சாமான் வகையறாக் கொடுக்கிறதில்லை.

௭. குழந்தைபிறந்த வீட்டில் சர்க்கரை கற்கண்டு சீனி இவைகளில் ஒன்று அள்ளிவழங்குகிறது. வருகிறவர்கள் வெற்றிலை பாக்குப் போட்டுக்கொள்கிறது.

அ. விளையாட்டுப்பெட்டி வேலிற்கு பிள்ளைப் பானைச்சாதம் ஒரு வகை மட்டும் செய்து கொடுக்கிறது.

௯. காப்புக்கட்டுப் புதுமையில் சீனி பாக்கு வகையருவிற்காக புள்ளி ஒன்றுக்கு ரூபாய் ௧-க்குள்ளும், மறுபுதுமைக்கு ரூபாய் அரைக்குள்ளும் கொடுக்கிறது. பழங்கள் சட்டி சவுக்கம் வகையரு எவ்விதச்சாமான்களும் கொடுக்கிறதில்லை.

௧0. பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் வைப்பதற்கு தேங்காய் வாழைப் பழம் வெற்றிலை பாக்கு நெல் கொண்டுபோகிறது. மாமக்காரர் உபாத்தியாயருக்கு ரூபாய் ஒன்று கொடுக்கிறது. வந்தவர்களுக்குப் பலகாரம் பழம் வகையரு கொடுக்கிறதில்லை. கற்கண்டு சீனி சர்க்கரை இவைகளில் ஒன்றும் காப்பரிசியும் அள்ளிக்கொடுக்கிறது. பிள்ளைகள் மகார் நோன்புக்கு பணம் வாங்க வரும்போது மேற்கண்ட வகைகளில் ஒன்று அள்ளி வழங்குகிறது.

௧௧. மகார் நோன்பிற்கு பிள்ளைகளைச் சொந்தக்காரர் வீட்டிற்கு கூட்டி வருவதற்கு மூன்று வகைக்குள் பலகாரமும் சாப்பாடும் வைத்துக் கொள்ளு

கிறது. பணம் சட்டி கொட்டான் சவுச்சம் வகையறு சில்லரைச் சாமான் கொடுக்கிறதில்லை.

கஉ. கார்த்திகைப்புதுமை திருவாதிரைப்புதுமை யில் வாழைப்பழம் பணியாரம் திருவாதிரைத் தோசை இவைகள் சாப்பிடுகிறதைத் தவிர கையில் கொடுக்கிற தில்லை. மரவை வகையறு சில்லரைச் சாமானும் அவைக ளுக்காக பணமும் கொடுக்கிறதில்லை.

கஙு. கல்யாணம் கார்த்திகைப் புதுமைக்கு வெப் பாக்கு வெற்றிலை வழக்கம்போல் கொடுக்கிறது. காப்புக் கட்டுப் புதுமைக்கு ஊருக்குள் சினி தேங்காய் பழம் வகையறு கொடுப்பதும் வாங்குவதுமில்லை.

கச. கல்யாணம் புதுமை கார்த்திகைப் புதுமை திருவாதிரைப் புதுமை சஷ்டியப்த பூர்த்தி சதாபிஷே கம் கிரகப்பிரவேசம் முதலிய விசேஷங்களில் சுத்த போஜனமாக பத்து வகைக்குள் கறியும், ௨-வகைக்குள் குழம்பும், ரசம் க-ம், பாயசம் ௨-க்குள்ளும், வர்க்கான னம் ௨-க்குள்ளும், வடை அப்பளம் வாழைப்பழம் மாம் பழம் பலாப்பழம் இவைகளுக்குள் அவரவர் இஷ்டப் படியும் இலையில்உபயோகிக்கச் செய்கிறது.

கரு. கழுத்துருவிற்குப் பொன் கொடுத்தல் பெண்ணழைத்தல் வேவு எடுத்தல் ருதுசடங்கு தீர்த்தம் ஐந்து மருந்து சாப்பிடுதல் பிரசவந்துக்குக் கூட்டிவருதல் முதலானவைகளில் மேற்கண்ட வகைக்குள் அவரவர் இஷ்டப்படி இலையில் உபயோகிக்கச் செய்கிறது.

கசா. கல்யாணம் முதலிய விசேஷ காலங்களில் காலை மாலை பலகாரம் மூன்று வகைக்குள் இலையில் உபயோகிக்கச் செய்கிறது. பழையதுக்கு இரண்டு வகைக் கறிக்குள் செய்கிறது.

கஎ. தச்சுசெய்தல் நிலைவைத்தல் இவைகளில் காப்பி வெற்றிலை பாக்கு காளாஞ்சி மட்டும் கொடுக்கிறது.

கஅ. கிரகப்பிரவேசம் சஷ்டியப்தபூர்த்தி சதாபிஷேகம் சுவீகாரப்புதுமைகளில் நகரத்தார்களுக்குகாப்பி கொடுத்து தேங்காய் மூடியும் வாழைப்பழமும் வெற்றிலையும் பாக்கு சி. படி அரையும் கொடுத்து சாப்பாடும் வைத்துக் கொள்ளுகிறது. பெண்களுக்கு ஒன்றும் கொடுக்கிறதில்லை. வெற்றிலை பாக்கு போட்டுக்கொள்ளுகிறது.

கசு. கல்யாணம முதலிய விசேஷங்களில் பழங் களும் சட்டியும் சவுக்கம் சில்லரைச் சாமான்களும் அதற்காகப் பணமும் கொடுக்கிறதில்லே. பூச்செண்டும் எலுமிச்சம் பழமும் கொடுக்கிறது.

உ0. கல்யாணம் புதுமை முதலிய சகலவிசேஷங் களிலும் இரண்டு ஜதை மேளத்திற்குள் வைத்துக் கொள்ளுகிறது. மற்ற வாத்தியம் கதை கச்சேரி சதிர் முதலானவை நடத்துகிறதில்லே.

உக. மாராயம் சொல்லுகிற வண்ணானுக்கு ருது சடங்கிற்கு ரூ௩-ம் பிள்ளேபிறந்ததுக்கு ரூ௨-ம் கொடுத்துச்சாப்பாடும் போடுகிறது. மற்றபடி ஒன்றும் கொடுக்கிறதில்லே.

உஉ. பிள்ளே பிறந்தது என்று சொல்லவருகிற வர்களுக்கு ரூ௨-க்குள் ஒருஜோடி வேஷ்டி கொடுக் கிறது.

உ௩. சந்தை கடைத்தெருவில் பலகாரம் மோர் வேறு எவ்வித சாமான்களும் நமது பெண்பிள்ளேகள் கொண்டுபோய்விற்கிறதில்லே.

உச. தானம் செய்கிற வீட்டில் பாக்கு வெற்றிலை கொடுக்கிறதில்லை. உபயோகித்துக்கொள்கிறது,

உரு. தின்மை சபிண்டி திதிகளில் சட்டி பாக்கு பணம் கொடுக்கிறதும் வாங்குகிறதுமில்லை.

உசு. தின்மைக்குமட்டும் வடை பாயசம் பழம் அப்பளம் வர்க்கான்னம் தேங்காய்ப்பூ வகையறு செய்கிறதில்லை. கo-வகைக் கறிக்குள்ளும் ரு-வகைக்குழம்புக்குள்ளும் ரசம் க-ம் செய்து உபயோகித்துக்கொள்ளுகிறது.

உஎ. தின்மைக்கு நெல் எண்ணெய் வகையறு வழக்கப்படி, எண்ணெய் சி. படி. ச-க்குள்ளும் நெல் ஒரு பெட்டியிலும், சீயக்காய் மஞ்சள் பட்டு புஷ்பம் பன்னீர் கொண்டுபோகிறது. இது போல் கொண்டு வருகிறவர்களையும் கொண்டு வரச்செய்கிறது. நடைமாற்று விரிக்கிறதில்லை.

உஅ. வெடி. விசேஷத்தில் சட்டியும் பணமும் கொடுக்கிறதும் வாங்குகிறதும் இல்லை. வெற்றிலை பாக்கு உபயோகப்படுத்திக் கொள்கிறது.

உகூ. எந்த விசேஷங்களிலும் மூன்றுவகைப் பலகாரமும் வாழைப்பழமும் காப்பியும் செய்து, ஆண்பிள்ளைகள் பிள்ளைகள் எல்லோரும் இலைபோட்டுச் சாப்பிடுகிறது. பெண்பிள்ளைகளுக்கு விரதப்பலகாரம் மேல் கண்டபடி இலைபோட்டு சாப்பிடச்செய்கிறது. கையில் கொடுக்கிறதில்லை. எந்தவிசேஷத்திலும் எலுமிச்சம்பழம் பூச்செண்டு மட்டும் கொடுக்கிறது. வேறே யாதொன்றும் கொடுக்கிறதில்லை.

---

௩0. மண்டபப்படி உபயத்திற்கு சந்தணம் தேங்காய்மூடி வெற்றிலைப்பட்டியல் வாழைப்பழம் சுண்டல் கொடுக்கிறது.

௩க. மாப்பிள்ளை யழைத்தல் பெண்ணழைத்தல் இவைகளில் வாணம் மத்தாப்பு உபயோகிக்கிறதில்லை.

௩உ. மேலே கண்டிருக்கிறபடி நம்மூரிலும் அயலூரிலும் நாம் நடந்து கொள்கிறது. வியனுக நாம் கொடுக்கிறதும் வாங்குகிறதுமில்லை.

நந. மேற்கண்ட எல்லா விசேஷங்களிலும் விவரித் திருப்பதற்கு அதிகமின்றி அவரவர்கள் சௌகர்யம்போல் செய்கிறது.

நச. கல்யாணம் முதலான சகல விசேஷங்களிலும் மேற்கண்டபடி நமது ஊரிலும் அயலூர்களிலும் நாம் நடந்துகொள்கிறது.

நரு. மேற்கண்டவகைகளுக்கு விரோதமாய் மீறி நடந்தவர்களுக்கு நகரத்தார் கூடித்தீர்மானம் செய்து கொள்ளுகிறது.

(இந்தத் தீர்மானத்தை ரௌத்திரி௵ பங்குனிமீ கசஉ௳முதல் ஊர்ஜிதத்துக்குக் கொண்டுவருகிறது.)

காரைக்குடி

வைரவன்கோவில் நகரத்தார்.

(சொல்படி இது எழுதினது காரைக்குடி
பள. தேனப்பசெட்டி, இராமநாதன்.)

தனவைசிய ஊழியன் பிரஸ், காரைக்குடி -85-300-21.

ரௌத்ரி-௵ பங்குனி-மீ௴ ௧௧-௳யில் பேசிக்கொண்ட விபரம்.

எந்தக் காரியங்களிலும் சம்பந்திக்கும் வகையறா பேர்களுக்கும் மற்றவர்களுக்கும் மூன்று வகைப் பலகாரம் பந்திக்கு உபயோகிக்கக் கூடிய மாதிரி சிறிதாகச் செய்து சாப்பிடக்கூடியதைக் கொடுத்து நாமும் அது போல் வாங்கிக் கொள்கிறது.

நகரத்தார் சொல்படி இது எழுதியது.

முத்து. வீர. ராமனாதன் செட்டி வீரப்பன்.

Printed
at the D. V. O.
Press,
Karaikudi.
· 102-300-21.